அவர்களுக்கு வீடு கட்டும் கடன் கொடுக்க அனுமதித்ததால், சொந்த வீடு கட்டியிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு, சென்னை, கோவையைத் தவிர மற்ற இடங்களில் எந்தவிதமான தேவையும் இல்லை. பொது மக்களுக்கு வேண்டுமென்று சொன்னால், கேட்பு இருப்பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

மேம்பாலம்

***49923 திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, கெடார் ஊராட்சி, செல்லங்குப்பம் காங்கேயனூர் சாலையில் பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியத்தில் உள்ள காங்கேயனூர் வழியாக செல்லங்குப்பம், கெடார் செல்லும் சாலையில், பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட காணை ஒன்றியம், கெடார் பஞ்சாயத்திற்குட்பட்ட செல்லங்குப்பம் முதல் காங்கேயனூர் வரையுள்ள சாலையின் குறுக்கே ஓடுகிற பம்பையாற்றில் ஒரு தரைப்பாலம்கூட இல்லை என்பது மட்டுமல்ல; பொது மக்கள் செல்வதற்கு வழியோ அல்லது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை எடுத்துச் செல்லும் வாகனத்திற்கான ஒரு பாதையோகூட அங்கு இல்லை. ஒரு நடைபாதைதான் அங்கே இருக்கிறது. எனவே, வெள்ளப்பெருக்கு காலத்தில் போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப்படுகிற ஒரு மோசமான நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மேம்பாலம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். நினைவூட்டலாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இதே சட்டமன்றப் பேரவையில், அதே காணை ஒன்றியத்திற்குட்பட்ட மல்லிகைப்பட்டு கிராமத்தில் ஒரு மேம்பாலம் கேட்டிருந்தேன். அந்த மேம்பாலம் உத்தரவாகி, பணிகள் துவங்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். இந்தச் சட்டமன்றத்தின் ஆயுள் காலம் எந்தக் குறையுமின்றி நிறைவு பெறுகிற இந்தச் சூழ்நிலையில்கூட, அந்த மேம்பாலத்திற்கான பணி துவங்கப்படாத சூழ்நிலை இருக்கிறதென்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, ஏற்கெனவே உத்தரவளிக்கப்பட்ட பாலம் வருமா, புதிய பாலம் எழுமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட காணை ஒன்றியத்தில், காங்கேயனூர் வழியாக செல்லங்குப்பம் கெடார் செல்லும் சாலையில் பம்பையாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டக்கூடியது பற்றியது இக்கேள்வி. இச்சாலையானது விழுப்புரம், மாம்பலப்பட்டு திருக்கோயில் சாலையில் விரிந்து

பொன்னங்குப்பம், பள்ளியந்தூர், காங்கேயனூர் வழியாக மல்லிகைப்பட்டு சாலையில் இணையும் மாவட்ட இதரச் சாலையாகும். இந்தச் சாலையில் 4.8 கி.மீ.—ல் பம்பை ஆறு குறுக்கிடுகிறது. தற்போது இவ்விடத்தில் 15 வரிசை கொண்ட குழாய்ப் பாலம் அமைக்கப்பட்டு, போக்குவரத்துக்கான பயன்பாட்டில் உள்ளது. வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப, உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியம், பாத்துக்கொட்டா வரையில் தென்பெண்ணையாறு ஓடுகிறது. மழைக் காலங்களில் வெள்ளம் அதிகமாக வரும்போது, வெள்ளத்தால் மக்கள் அடித்துச் செல்லப்பட்டு, உயிர்ச் சேதம் ஏற்படுவது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஊர் மக்கள் ஆற்றில் வெள்ளம் வரும் காலங்களில் சுமார் 30 அல்லது 40 கி.மீ. தூரம் சுற்றி உத்தனப்பள்ளி வந்து, அங்கிருந்து பாத்துக்கொட்டா செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் விதி 110—ன்கீழ் பாத்துக்கொட்டாவில் ஓர் உயர்மட்டப் பாலம் விரைவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அறிவித்து இரண்டாண்டு காலம் ஆகிறது. அந்தப் பாத்துக்கொட்டா பாலம் வருமா, வராதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2011—2012—லிருந்து 2015—2016 நடப்பாண்டு வரை, சுமார்

474 பாலங்கள் அறிவிக்கப்பட்டன. இவற்றில் 281 கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 109 பாலப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. திருத்திய மதிப்பீட்டின் ஒப்பந்த நிலையில் 9 பணிகள் இருக்கின்றன. நிருவாக ஒப்பந்த நிலையில் 69 பணிகள் இருக்கின்றன. நீக்கம் 6. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பால நிலையை ஆய்வு செய்து, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

முற்பகல் 10—30

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆறுகளும் கடந்த பருவ மழையின்போது பெருக்கெடுத்தன. ஊத்துக்கோட்டையிலிருந்து பூண்டி வழியாக திருவள்ளூர் செல்லும் பிரதான சாலை ஆரணி ஆற்றுக்குக் குறுக்கே அமைந்துள்ளது. ஆரணி ஆற்றுக்குக் குறுக்கே தரைமட்டப் பாலம் மட்டுமே தற்போது உள்ளது. கடந்த மழையில், வெள்ளப் பெருக்கு காரணமாக, ஊத்துக்கோட்டை இதர பகுதிகளிலிருந்து 30 நாட்களுக்கும் மேலாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. இவ்வளவு காலம் அந்த இடத்தில் மேல் மட்டப் பாலம் கட்டாமல் இருப்பது கடும் பாதிப்புகளை உண்டாக்கி வருகிறது. ஆந்திர மாநிலம், பிச்சாட்டூர் அணையிலிருந்து நீர் திறந்துவிடப்பட்டால், ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும். எனவே, ஊத்துக்கோட்டை—திருவள்ளூர் சாலையில் ஆரணி ஆற்றுக்கு குறுக்கே மேல்மட்டப் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலம், பிச்சாட்டூர் அணை திறக்கும்போது, ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு,*

ஊத்துக்கோட்டை—திருவள்ளூர் சாலையிலுள்ள தரைப்பாலம் தண்ணீரில் மூழ்குகிறது. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதற்கு உடனடி நடவடிக்கை எடுத்து, மாற்றுப்பாதை அமைத்து, போக்குவரத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் இன்று போக்குவரத்து வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால், அங்கே போக்குவரத்து தடைபடுகின்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இப்பாலத்தை 30 கோடி ரூபாய் செலவிலே உயர்மட்டப் பாலமாகக் கட்டுவதற்கு கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதியில் நான்கு இரயில்வே மேம்பாலங்கள் அறிவிக்கப்பட்டன. இதுவரையில் அந்தப் பணிகள் எதுவும் தொடங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும், எந்தெந்தப் பாலங்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குண்டான பதில் தரப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் நான்கு பாலங்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த நான்கு பாலங்களும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தால், அந்தப் பாலப் பணிகளைத் துவங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*